# ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனை



# ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனை

## The Trial of Comparison

*பாட ஆதாரம் : Christian Resources App > Audio Sermons > “Ric Cunningham – The Trial of Comparison”)*

*English version :*

***Christian Resources App***

Tamil Translated by :

***www.foodfornewcreature.com***

# ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனை

*– சகோ. ரிக் கன்னிங்ஹேம், USA*

## முன்னுரை


*ஒருவேளை, நீங்கள் இச்சோதனையை இதுவரையில் அனுபவிக்காமல் இருக்கலாம். இல்லையேல், எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கலாம். அல்லது, ஏற்கனவே அனுபவித்திருக்கலாம், அல்லது இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கலாம்...*

*நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பிருக்கக்கூடிய சில வேதாகம உதாரணங்களை உங்கள் முன்வைக்கப்போகிறோம். எவ்வாறெல்லாம் இந்த ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனைகள் வரக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுவதாக இப்பாடம் அமைந்திருக்கும்.*

## காயீனும் ஆபேலும்

*உங்களுக்குப் பூர்வக்காலத்து காயீன் மற்றும் ஆபேல் நினைவிருக்கலாம். அங்கேயே, இந்த ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனை ஆரம்பமாகியிருந்தது. காயீன் மூத்தவன், ஆபேல் இளையவன். இவர்கள் இருவருமே கர்த்தருக்கு முன்பாக தங்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். காயீனுடையதை அங்கீகரியாத கர்த்தர், ஆபேலுடையதை அங்கீகரித்தார். காயீனோ இதுகுறித்து எரிச்சல் அடைந்தார். தேவன் ஏன் காயீன் செலுத்திய பலியை அங்கீகரிக்கவில்லை? அதற்கான பதிலாக,* ***'ஆபேலைப் போலொத்த விதத்தில், நீயும் காணிக்கை செலுத்தினால், அது ஏற்றுக்கொள்ளப்படும், ஒருவேளை நீ அப்படி செய்யாமல் போனால், உன்னுடைய இந்த எதிர்மறையான போக்கு தொடருமேயானால், பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்'*** *எனும் விதத்தில் கர்த்தர் காயீனிடம் எடுத்துரைத்தார்.*

தன் இளைய சகோதரனுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது மிகவும் தாழ்மையான / தலைக்குனிவான அனுபவமாக இருக்கும் எனக் கருதிய காயீனால் தன்னை கீழ்ப்படுத்த முடியாமல் போனது. இப்படியாக, அவரது காணிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனது. பின்னர் என்ன நடந்தது? அது காயீனை தனது சகோதரனுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு வழிவகுத்ததோடுகூட, அவரால் அந்த சிந்தையோடு மேற்கொண்டு எதையும் செய்ய முடியாமல் போனது. இதன் காரணமாக, ஆத்திரத்தில் அவர் ஆபேலைக் கொன்றுபோட்டார். ஆம், பூமியில் நடந்த முதல் மனித கொலை!



இந்த நிகழ்விலிருந்து புதிய சிருஷ்டிகளாகிய நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? நாமும் நமது சகோதர சகோதரிகளுடைய பலிகளோடு நமது பலிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்புள்ளது. நம்மால் மற்றவர்களிடமிருந்து வருகிற ஆக்கப்பூர்வமான விமர்சனத்தையோ அறிவுறுத்தலையோ ஏற்றுக்கொள்ள முடிகிறதா, அல்லது, நமது விருப்பத்திற்கு ஏற்றபடி மட்டும் செய்ய விரும்புகிறோமா? சிந்தித்துப் பார்க்கலாம் பிரியமானவர்களே.

*மற்றவருடைய பலியை தேவன் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறாரோ, அதேபோல், நம்முடைய பலியையும் தேவன் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது பாராட்டுகிறாரா என்பதற்கான வெளிப்புற ஆதாரங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம், இதன் மூலமாக நாம்* ***நம்முடைய சிறிய பலியை இன்னொருவருடைய பலியோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கலாம்****. இது சொல்லர்த்தமான கொலை செய்வதற்கு நேராக நம்மை வழிநடத்தாது, மாறாக நாம் நம்முடைய சகோதர சகோதரிகளைப் பற்றி அவதூறு மற்றும் தீமை பேசுவதற்கோ, தீமையான அனுமானம் செய்யவதற்கோ நேராக வழிநடத்த வாய்ப்புள்ளது. இப்படியாக அவர்களின் குணாதிசயங்களை படுகொலை செய்வதன் மூலமாக,* ***ஆவிக்குரிய கொலையாளிகளாக*** *மாறிவிட வாய்ப்புள்ளது.* ***காரணம்:*** *தன்னிடம் உள்ளதை பிறரிடம் இழந்துவிடுவோமோ எனப் பொறாமைப்படுதல் (jealousy), தான் விரும்புவது மற்றவரிடம் உள்ளதே எனப் பொறாமைப்படுதல் (envy) போன்றவை கர்த்தருடைய ஜனமாகிய நம்மிடையே கூட எழும்பி, இப்படிப்பட்ட ஒரு கொடிய குற்றத்தைச் செய்ய வைத்திடும்.*

## எரேமியா, எசேக்கியேல், தானியேல்

*எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேல் ஆகிய தமது முப்பெரும் தீர்க்கதரிசிகளுடன் கர்த்தர் எவ்வாறு செயல்பட்டார் என்பதை இப்போது நாம் பார்க்கலாம். இந்த மூவரும் சம காலத்தில் வாழ்ந்து, தீர்க்கதரிசனம் உரைத்துக்கொண்டிருந்த தீர்க்கதரிசிகள். இதில் வயதில் மூத்தவராக எரேமியாவும், அடுத்து எசேக்கியேலும், பின்னர் மிகவும் இளையவராக தானியேலும் இருந்தார்கள்.*


*இஸ்ரயேல் இராஜா, தன்னை தாழ்த்தி, தேவனுடைய புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாது போகும் பட்சத்தில், தேசத்தின் மீது தேவனுடைய கோபாக்கினை மூளும், பாபிலோனைக் கொண்டு அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று* ***தீர்க்கதரிசியாகிய எரேமியா*** *செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார்.*

*ஆனால் இஸ்ரயேல் இராஜாவோ அவருடைய ஆலோசனையை நிராகரித்து, அவரை மிகவும் கடுமையான முறையில் சிறையில் அடைத்தார். இதுகுறித்து பின்வருமாறு வாசிக்கிறோம்:*

***எரேமியா 38:60 - "அப்பொழுது அவர்கள் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் துரவிலே** (அல்லது, கிணற்றிலே) **தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான்."***

*அந்தோ பரிதாபம்! எரேமியா வெளியேறுவதற்கு வழியே இல்லை. அந்தத் துரவு இரவில் கும்மிருட்டாகவும், பகலில் வெளிச்சம் குறைவாகவும் இருந்திருக்க வேண்டும். ஒருவேளை அங்கே பூச்சிகள், பல்லிகள், பாம்புகள் போன்றவை இருந்திருக்கலாம்.*

*நீங்கள் எப்போதாவது சகதியான நீரில் நீந்தினதுண்டா, அதன் அடிப்பகுதியை உங்கள் கால்கள் தொடும்போது, அது சேறும் சகதியுமாக இருப்பதை உணர்ந்ததுண்டா? அதைக்காட்டிலும் எரேமியாவினுடைய அனுபவம் மிகவும் மோசமாக இருந்தது. இந்த சேற்றில் அவர் எவ்வளவு ஆழம் மூழ்கினார் என்பதை நம்மால் அனுமானிக்க மாத்திரமே முடியும்.*



எரேமியா வெளியேறுவதற்கு எந்த வழியும் இருக்கவில்லை, மட்டுமின்றி சற்று நேர ஓய்வுக்குக்கூட தன்னை சகதியிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாமல் இருந்தார் என்பதை நாம் நினைவுகூருகிறோம்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில், பாபிலோன் இராஜ்யத்தின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிக்குச் சிறைபிடித்துச் செல்லப் பட்ட இஸ்ரயேலரின் மத்தியில், கர்த்தரின் **தீர்க்கதரிசியாக எசேக்கியேல்** வாழ்ந்து வந்தார்.

எருசலேமின்மீது வரவிருந்த முற்றுகை குறித்த செய்தி கொடுப்பதற்காக, கர்த்தர் அவரை என்னவெல்லாம் செய்ய வைத்தார் என்பதை சுருக்கமாக இங்கே பார்க்கலாம் ***(எசேக்கியேல் 4)***.

இஸ்ரயேல் வம்சத்தாரின் அக்கிரமத்தினிமித்தம் அவர் தனது இடதுபக்கமாய் ஒருக்களித்துப் படுத்துக் கொள்ளும் படிக்குக் கட்டளையிடப்பட்டார் – அவர் அந்தப்பக்கமாய் ஒருக்களித்திருக்கும் நாட்களின் இலக்கத்தின்படியே அவர்களுடைய அக்கிரமத்தைச் சுமக்க வேண்டியிருந்தது. கர்த்தர் அவர்களுடைய அக்கிரமத்தின் வருஷங்களை அவருக்கு நாட்கணக்காய் எண்ணக் கட்டளையிட்டார்; இப்படியாக முந்நூற்றுத்தொண்ணூறு நாட்கள்வரைக்கும் அவர் இஸ்ரயேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை சுமக்கவேண்டியிருந்தது. ***(எசேக்கியேல் 4:4,5)***



*அவர் இவைகளை நிறைவேற்றினபின்பு, மறுபடியும் அவர் தன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்க வேண்டியிருந்தது; ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை கர்த்தர் அவருக்குக் கட்டளையிட்டிருந்தார். **(எசேக்கியேல் 4:6)***

*இங்கே எசேக்கியேல் தன்னுடைய இடதுபக்கமாய் முந்நூற்று தொண்ணூறு நாட்களும், அதன்பின் வலதுபக்கமாய் இன்னும் நாற்பது நாட்களும் ஒருக்களித்துப் படுத்திருக்க வேண்டியிருந்தது. ஆக மொத்தம், ஏறத்தாழ ஒரு வருடத்திற்கும் மேல் ஆகியிருக்க வேண்டும். எவ்வாறு எசேக்கியேல் ஒரு வருஷத்திற்கும் மேலாக ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு, தனக்கு முன்பாக, எருசலேம் நகரம் வரையப்பட்ட செங்கல் ஒன்று முற்றிக்கைபோடப்பட்டிருக்க, அதற்கும் தனக்கும் நடுவாக ஓர் இருப்புச்சட்டியையும் வைத்துகொண்டிருந்திருப்பார் என நீங்கள் நினைக்கிறீர்கள்? மட்டுமின்றி, அவர் மறுபக்கத்தில் புரளக்கூடாதபடி சங்கிலிகளால் அல்லது கயிறுகளால் கட்டப்பட்டுமிருந்தார்! ஆம், அதைத்தான் அவர் செய்து கொண்டிருந்தார், இதுவே அவருடைய சாட்சியாகவும் இருந்தது. ஆம், அவர் ஒரு **வாழும் தீர்க்கதரிசனமாக (LIVING PROPHECY)** இருந்தார்! என்னதான் யூதர்கள் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தாலும், அவர்கள் இன்னுமே தங்களுடைய அநுதின அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது, ஆகவே, மற்ற யூதர்கள் தங்கள் அன்றாடப் பணிகளுக்காகச் செல்லுகிற சில வகையான பொது இடங்களில் எசேக்கியேல் இதனையெல்லாம் செய்து காண்பித்திருக்க வாய்ப்பிருக்கிறது.*



*கர்த்தருடைய நோக்கத்திற்கு உதவும் வண்ணமாக, மக்கள் நடமாடும் பகற்பொழுதில், உதாரணமாக, ஒரு நாளைக்கு எட்டு முதல் பன்னிரண்டு மணி நேரம் வரை என அவர் இதனையெல்லாம் செய்திருக்க வாய்ப்பிருக்கிறது. நாம் ஒரு வருடமளவும், ஒரு நாள் முழுக்க நமது ஒரு பக்கத்தில் ஒருக்களித்துப் படுத்திருப்பதை, நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.*

*எசேக்கியேலுடைய கடுமையான அனுபவம் அதோடு நின்றுவிடவில்லை. அவர் மற்றொன்றைச் செய்யும்படிக்கு கர்த்தர் கட்டளையிட்டார். அதின்படி, அவர் கோதுமையையும் வாற்கோதுமையையும் பெரும்பயற்றையும் சிறுபயற்றையும் தினையையும் கம்பையும் வாங்கி, அவைகளை ஒரு பாத்திரத்திலே போட்டு, அவைகளால் தனக்கு அப்பத்தைச் சுட்டு, தான் ஒருக்களித்துப் படுக்கும் நாட்களுடைய இலக்கத்தின் படியே முந்நூற்றுத்தொண்ணூறு நாள் அதில் எடுத்து சாப்பிட வேண்டியிருந்தது.* ***(எசேக்கியேல் 4:9)***

*அவர் இந்த அப்பத்தை முந்நூற்று தொண்ணூறு நாட்களளவும் சாப்பிட்டார். அவர் சாப்பிட்ட போஜனம் நாள் ஒன்றுக்கு இருபது சேக்கல் எடையாக இருந்தது. அவ்வாறே அவர் அநுதினமும் சாப்பிட்டு வந்தார்.* ***(எசேக்கியேல் 4:10)*** *அவர் தண்ணீரையும் அளவோடு குடிக்க வேண்டியிருந்தது.*

*இது மோசமாக தெரியவில்லையா? அடுத்ததைப் பாருங்கள்! அவர் மனுஷனிலிருந்து கழிந்த மலத்தினால் ஆன வறட்டிகளைக்கொண்டு, அந்த அப்பத்தை அடையைப்போல், எல்லா மனுஷருடைய கண்களுக்கு முன்பாகச் சுட்டுச் சாப்பிடு மாறு அறிவுறுத்தப்பட்டார்!* ***(எசேக்கியேல் 4:12)*** *பரிதாபம்! ஆனால் எசேக்கியேலோ, தான் ஒருபோதும் தன்னை இவ்வாறு தீட்டுப்படுத்தவில்லை என்றும், ஒருவேளை விலங்குகளின் சாணத்தைப் பயன்படுத்தலாமா? என்றும் சொல்லி, கர்த்தரிடம் தனது எதிர்ப்பினைத் தெரிவித்தார். அதனால், அப்பம் சுடுவதற்கான எரிபொருளாக, மாட்டுச்சாணத்தின் வறட்டியைப் பயன்படுத்த கர்த்தர் அவரை அனுமதித்தார். சாணத்தைச் சேகரித்து, தட்டையாக்கி, வறட்டியாக உலர வைக்கும் இந்த*

*முறை ஏதோ வழக்கத்திற்கு மாறான காரியம் இல்லை, மாறாக இது சமவெளியில் இருந்த அமெரிக்க இந்தியரால் பின்பற்றப்பட்ட ஒரு வழக்கமே. பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவிலும் இந்த வழக்கத்தை நான் பார்த்திருக்கிறேன்.*

*நாம் கரித்துண்டு கலவையால் செய்யப்பட்ட எரிபொருள் கட்டிகளைப் (charcoal briquettes) பயன்படுத்துவதைப் போல, அவர்கள் மாட்டுச்சாணத்தின் வறட்டியை, சமையலுக்கான எரிபொருளாக பயன்படுத்தினார்கள்.*

*(அமெரிக்காவைச் சேர்ந்த அல்லது நவீன காலத்தைச் சேர்ந்த) நீங்களும் நானும் இதனை ஒரு சுகமான வேலையாகப் பார்ப்போமா என்றால், சந்தேகம்தான்.*

*இப்போது நாம் தானியேல் இரண்டாம் அதிகாரத்திலிருக்கும் காரியத்தைக் குறித்து பார்க்கலாம் **(தானியேல் 2)**. இதுவும் ஏறக்குறைய அதே காலக்கட்டத்தில்தான் நடந்தது. **தானியேல்**, பாபிலோனுடைய தலைநகரில் சிறைப்பட்டுக்கிடந்த தம்முடைய ஜனங்களுக்குக் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தார்.*

*இராஜாவின் போஜனத்தினால் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் விலகியதில், தானியேல் காண்பித்த உண்மைத் தன்மையினால், அவரும் மேஷாக்கும், சாத்ராக்கும் ஆபேத்நேகோவும் இராஜாவின் கனவுகளை வியாக்கியானம் பண்ணும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டனர். தானியேல் இதைச் செய்ததால், என்ன நடந்தது என்பது குறித்து இரண்டாம் அதிகாரத்தில் பின்வருமாறு நாம் வாசிக்கிறோம் **(தானியேல் 2:46 – 48):***

***“அப்பொழுது இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான். இராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், இராஜாக்களுக்கு ஆண்டவரும்,***

***மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான். பின்பு இராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனை பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்."***

*கர்த்தரின் இந்த மூன்று வெவ்வேறு சம காலத்திய தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவருடைய அனுபவங்களில் எப்பேர்ப்பட்ட வித்தியாசம் காணப்படுகிறது! ஒருபக்கம், எரேமியா ஒரு சேற்றுக் குழியில், இருளில் கிடந்தார், மறுபக்கம், எசேக்கியேல் ஒரு வருடத்திற்கும் மேலாக தன் இடது வலது பக்கத்தில் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு, மாட்டுச் சாணத்தில் சமைத்த சொற்ப அளவு அப்பத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார், இன்னொரு பக்கமோ, தானியேல் பாபிலோன் இராஜாவின் அரண்மனையில் உயர்ந்த பதவியில் உயர்த்தி வைக்கப்பட்டிருந்தார்!*

*மூவருமே உண்மையுள்ளவர்களாக காணப்பட்டனர். மூன்று பேருமே கர்த்தருடைய சித்தத்தைச் செய்துகொண்டிருந் தார்களே ஒழிய, அவர்கள் யாரும் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லை.*



*சகோதர சகோதரிகளே, ஒருவேளை, இவர்களில் ஒருவராக நீங்கள் காணப்பட்டால், யாரை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்? ... வேதவாக்கியங்களில் காணப்படுவது போல, "**கர்த்தர் தம்முடைய பார்வைக்கு நலமானதை நமக்குத் தருவாராக**" என்று முழு மனதாக சொல்பவர்களாய்க் காணப்படுவோமாக.*

*எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேல் ஆகியோரின் உதாரணத்தைக் கடந்துபோவதற்கு முன்பதாக, நாம் இன்னொன்றைக் கவனிக்க விரும்புகிறோம்.*

***எசேக்கியேல்** 14ம் அதிகாரத்தில், தானியேலைப் பற்றி எசேக்கியேலுக்கிருந்த அபிப்பிராயம் குறித்த ஒரு நுண்ணிய தகவல் நமக்குக் கிடைக்கின்றது.*

***எசேக்கியேல்** 14:14- "**அப்பொழுது நோவா, தானியேல், யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**"*

*இது எசேக்கியேல் மூலமாக கர்த்தர் பேசுகிறார் என்பது உண்மைதான் என்றாலும், எசேக்கியேல் தாமே அதை நமக்காக பதிவு செய்கிறார். எசேக்கியேலுக்கும் அதே உணர்வு / சிந்தை காணப்பட்டிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர் தனது சம காலத்தவர்களில் ஒருவராகிய தானியேலை நீதியின் முன்மாதிரியாகப் பதிவிடுகிறார். குறிப்பாக, தானியேல் மிகவும் வசதியான, மிகவும் உயர்ந்த நிலையில் இருந்த அதே சமயத்தில்தான், எசேக்கியேல் கடுமையான சோதனைகளையும், பாரங்களையும் சகித்துக்கொண்டிருந்தார் என்பதை நினைக்கும் போது, அவர் தானியேல் குறித்து இவ்வாறு கூறியது உண்மையிலேயே ஆச்சரியமாக உள்ளது.*

*இந்த மனோபாவம் தான் நமக்கும் இருக்க வேண்டும். **நாம் நமது போராட்டங்களை ஏற்றுக்கொண்டு, அம்மாதிரியான போராட்டங்கள் இல்லாமல் இருக்கிற மற்றவர்களிடம் உள்ள நற்குணங்களைப் பாராட்ட (மதித்துணர) வேண்டும்.***

# வித்தியாசமான சூழ்நிலைகள்

*முன்பு ஐரோப்பாவில் நம்முடைய சகோதர சகோதரிகள் கம்யூனிசம் மற்றும் நாஜிக்களின்கீழாக எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்பது பற்றியும், அதே சமயம், வட அமெரிக்காவிலிருந்த நமது சகோதர சகோதரிகள் சுதந்திரத்தையும், ஆறுதலையும் பெற்றனர் என்பது பற்றியும் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கலாம்.*

*மறு முனையில், அவர்கள் என்ன மாதிரியான அனுபவங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தனர் என்பது கூட நமக்குத் தெரியவில்லை. இன்றும் கூட, மற்ற தேசங்களில் உள்ள நமது சகோதர சகோதரிகளின் அனுபவங்கள், அவர்களின் வறுமை, அவர்களுக்கு ஏற்படும் உபத்திரவங்கள் மற்றும் அவர்களுக்கு இருக்கும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பொதுவாக நமக்கு (அமெரிக்காவில்) ஏராளமான ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. இருந்தாலும், கர்த்தர் அவ்வாறு இருக்கும்படிக்கே அனுமதிக்கிறார், மேலும் இரண்டையுமே அவர் ஏற்புடையதாகக் காண்கிறார்.*

***சரி, இங்கே ஒப்பிட்டுப்பார்ப்பதற்கான சோதனைகள் என்னவாக இருக்க முடியும்?***

*முதலில், இதனை நாம் உலகளவில் சிந்தித்துப் பார்க்கலாம். முன்னெப்போதும் இல்லாத வகையில், இன்றைய காலக்கட்டத்தில், ஒரு நாட்டின் (country) அல்லது ஓர் இடத்தின் (location) தற்போதைய தேசிய நிலைமைகள் குறித்த அதிகப்படியான தகவல்கள் / செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன; இப்படியாக ஒருபுறம், சிறந்த இடம்சார்ந்த சூழ்நிலையில் அல்லது சிறந்த இம்மைக்குரிய சூழ்நிலையில் காணப்படுபவர்கள், சாதகமில்லாத கீழான சூழ்நிலையில் இருப்பவர்களைக் குறித்து பரிதாபமாக சிந்திப்பதற்குத் தூண்டப்படலாம். மறுபுறம், மிகவும் சாதகமற்ற சூழ்நிலையில் இருப்பவர்கள், மற்ற இடங்களில் இருக்கும் சகோதர சகோதரிகள் இம்மைக்குரிய வகையில் மிகவும் சிறப்பாக வாழ்கிறார்கள்*

என்பதைப் பார்த்துவிட்டு, ஒருவேளை தேவன் (தங்களுக்கு இம்மாதிரியான சூழ்நிலையை அனுமதித்து) தங்களைத் தண்டித்துக்கொண்டிருக்கிறார் எனச் சிந்திப்பதற்கும் வாய்ப்புள்ளது. அல்லது, எல்லாம் பெற்றிருந்தும் எந்த உதவியும் செய்யாமல் வெகு தொலைவில் வாழும் சகோதர சகோதரிகளைப் பற்றி கனிவாக / இரக்கத்தோடு நினைத்துப்பார்ப்பது, சிலருக்கு ஒரு சோதனையாக இருக்க வாய்ப்புள்ளது.

எந்தப் பிரச்சினையும் உண்டுபண்ணாமல், அல்லது, ஒருவேளை கர்த்தர்தாமே அந்தச் சகோதர சகோதரிகள் சகிக்க வேண்டுமென்று அனுமதித்த சூழலைச் சீர்குலைக்காமல், அவர்களுக்கு எவ்வாறு கர்த்தருடைய ஆசீர்வாதங்களைச் சிறப்பாகப் பகிர்ந்துகொடுப்பது என்பதை அறிந்துகொள்வது மிகவும் கடினமான காரியங்களில் ஒன்றாக இருக்கிறது.

எவ்வாறாயினும், **நம்மைப் போல, உலகெங்கிலுமுள்ள நமது சகோதர சகோதரிகள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளே என்று, அவர்கள் அனைவரையும் நம்முடைய ஜெபங்களில் நினைப்பது, ஏற்புடைய கிறிஸ்துவைப் போன்ற சாயலாகும்** என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.

ஆனால், இந்த வகையான ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனைக்கு, அந்தச் சகோதர சகோதரிகள் எங்கோ தொலைவில் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. உண்மையில், நம்முடைய சொந்த தனிப்பட்ட சூழ்நிலைகளை நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, நம்மை நாமே சோதனைக்கு உட்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது! பின்வரும் சில எடுத்துக்காட்டுகளில், இந்தக் காரியத்தை மேலும் உற்றுநோக்கவிருக்கிறோம்.

## ராகேலும் லேயாளும்

அடுத்து, ராகேல் மற்றும் லேயாளின் உதாரணம் குறித்து பார்க்கலாம். அவர்கள் இருவருமே தங்களுடைய மற்ற குடும்ப உறுப்பினரை ஒப்பிட்டுப் பார்த்தார்கள்.

*யாக்கோபு, லேயாளை விடவும் ராகேலை அதிகமாக நேசித்தார் என்பது பற்றி நமக்குத் தெரியும். லேயாளோ, அதிக குழந்தைகளைப் பெற்றெடுப்பதன் மூலமாக கணவருடைய பாசத்தைச் சம்பாதித்துக்கொள்ளலாம் என்றெண்ணினாள். அவளுக்கு முதல் குழந்தையும் பிறந்தது. மறுபுறம், ராகேலுக்கென்று தனி போராட்டம் போய்க்கொண்டிருந்தது, அதைக் குறித்து வாசித்துப் பாருங்கள், மிகவும் பரிதாபமாக இருக்கும். இது, சகோதரிகளாகிய தங்களில் யார் தங்களது கணவனாகிய யாக்கோபுடைய பாசத்தை / நேசத்தை வென்றெடுப்பார்கள் என்பதற்கான போட்டியாக இருந்தது.*



*என்ன மாதிரியான ஒரு குடும்ப போராட்டம்! அதிலும் அவர்கள் இருவருமே உடன்பிறந்த சகோதரிகள்.*

*பிற்காலத்தில், நியாயப்பிரமாணத்தின்படி, ஓர் ஆண், சகோதரிகளை திருமணம் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. (**லேவியராகமம் 18 : 18 - “உன் மனைவி உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும் பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது.”**).*

*ஆனால், இது முன்பு நடந்த ஒரு சம்பவமாகும். ஒரு குடும்பத்திற்குள் நடக்கும் இம்மாதிரியான ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனையை நாம் காணும்படியாக இந்தச் சம்பவமானது நமக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது; மேலும் இம்மாதிரியான*

*குடும்பத்திற்குள், ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனைகள் இன்னுமே தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று நாங்கள் நினைக்கின்றோம். ஒரே கணவனை மணந்த சகோதரிகளுக்கு இடையே தான் அவ்வாறு இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை, மாறாக ஒரு சகோதரியின் குடும்பம் மற்ற சகோதரியை விடவும் பெரிதாக இருக்கலாம் அல்லது நல்ல வசதியாக இருக்கலாம் என்பது போன்ற சோதனைகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. இந்த ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனைகள், சகோதரிகளுக்கு மாத்திரமல்ல, சகோதரருக்கும்கூட நடக்கும்.*

## மூன்று + ஒன்பது அப்போஸ்தலர்

*அடுத்து, மூன்று அப்போஸ்தலரை மற்ற ஒன்பது பேரோடு ஒப்பிடுவதற்கான சோதனை வருகிறது. மறுரூப மலையில், கெத்செமனே தோட்டத்தில் என பல சந்தர்ப்பங்களில் மற்ற ஒன்பது பேருக்குக் கிடைக்காத விசேஷித்த முன்னுரிமைகள் யாக்கோபு, யோவான் மற்றும் பேதுரு ஆகிய மூவருக்கும் அளிக்கப்பட்டன.*

*மற்ற ஒன்பது பேருக்கும் இது தொடர்பாக சோதனை இருந்ததாக பதிவு ஏதுமில்லை. இருப்பினும், மற்ற ஒன்பது பேரும் தனியே விடப்பட்டது போல உணர்ந்திருக்க வாய்ப்புள்ளது.*

*எப்படி இந்த மூவருக்கும் மட்டும் இந்தச் சிறப்புரிமைகள் கிடைத்தன? **ரீபிரிண்ட்ஸ் 4649**ல், சகோ. ரசல் அவர்கள் இம்மூவரும் இயேசுவிற்குப் பிரியமானவர்களாக (Jesus' favorites)*



இருந்தனர் என்று கூறுகின்றார். இம்மூவரும் தங்கள் விசுவாசத்திலும் வைராக்கியத்திலும் மிகவும் முன்னேறியிருந்ததே அதற்குக் காரணமென்று, **ரீபிரிண்ட்ஸ் 3345**ல் அவர் சொல்கிறார்.

எனவே, இதை வைத்துப் பார்க்கையில், நமக்கு என்னென்ன மாதிரியான சோதனைகள் வரக்கூடும்? சொல்லப்போனால், நமது சகோதர சகோதரிகளில் சிலருக்கு நம்மைக்காட்டிலும் அதிக ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகள் கிட்டியிருக்கும். அதற்காக நாம் வருத்தமும் பொறாமையும் கொள்கிறோமா (begrudge)? நாம் அவ்வாறு செய்யக்கூடாது. **கர்த்தர் தமது ஜனங்களில் ஒவ்வொருவரையும் தனித்துவமான வகையில் கையாண்டு வருகிறார்.**

கர்த்தர் இதன் அடிப்படையில் நமக்கு இரண்டு உவமைகளைக் கொடுத்திருக்கிறார்: **ஒன்று இராத்தல் பற்றின உவமை**, அதில் ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் ஒரே அளவு (அனைவருக்கும் சமமான நீதிமானாக்கப்படுதல் இருப்பதைக் குறிக்கும்) இராத்தல் கொடுக்கப்பட்டது, இந்தப் பொறுப்பினை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு கையாள்கிறார்கள், ஆண்டவருக்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் எவ்வாறு ஊழியம் செய்கிறார்கள் என்பவை அதில் விளக்கப் பட்டிருந்தன. **இன்னொன்று தாலந்துகள் பற்றின உவமை**, அதில் எஜமானனுக்கு ஊழியம் செய்ய ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் வெவ்வேறு அளவு தாலந்துகள் கொடுக்கப்பட்டன, அதன்பிறகு அதை வைத்து அவர்கள் தங்கள் வாழ்நாளில் என்ன செய்தார்கள் என்பது விளக்கப்பட்டிருந்தது. இரண்டு உவமைகளிலும், நாம் ஒரே எஜமானனுக்கு வேலையாட்களாக இருக்கிறோம், ஆனால் **நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள் (each of us are different)**, நாம் ஒவ்வொருவரும் நமக்குக் கிடைக்கும் வாய்ப்பைப் பொறுத்து ஊழியம் செய்ய வேண்டும் என்பது போன்ற படிப்பினைகளைப் பார்க்கிறோம். ஆனாலும், **நம்முடைய பெரும்பாலான வாய்ப்புகள் நாம் ஏறெடுக்கும் முயற்சிகளின் பலனாகவே நமக்குக் கிடைக்கின்றன** என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

மேலும் இது, நமது கர்த்தராகிய இயேசு, தம்முடைய

பூமிக்குரிய ஊழியத்தில் இந்த மூவருக்கும் அவர்கள் செய்ய வேண்டியிருந்த சில விசேஷித்த வேலைகளுக்காக அவர்களை எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதன் ஒரு பிரதிபலிப்பாக இருந்தது. இந்த மூவரும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தபோதிலும், மற்ற ஒன்பது பேரும் அதைக் கண்டு வருத்தமும் பொறாமையும் படாமல், தங்களுக்கென்று தனியே விசேஷித்த சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் அம்மூவரையும் பார்த்துவிட்டு, அந்த மூவரும் என்ன செய்கிறார்கள், அதை நானும் அதிகமாகச் செய்யவேன் என்கிற மாதிரி நினைத்திருக்க வேண்டும். தங்களை அவர்களோடு ஆரோக்கியமான வகையில் ஒப்பிட்டுப்பார்த்து, அவர்களை நல்ல ஒரு முன்மாதிரியாக நோக்கிப் பார்த்திருக்க வேண்டும்.

அதேசமயம், அம்மூவருக்கோ, இறுமாப்பு அடையும் வகையிலான சோதனை இருந்திருக்க வாய்ப்புள்ளது. அவர்கள் அவ்வாறு இறுமாப்பு அடைந்தார்கள் என்று நாங்கள் சொல்ல வரவில்லை, மாறாக இறுமாப்பு அடைவதற்கான வாய்ப்பு இருந்திருக்கும் என்றே கூறுகிறோம். என்னுடைய மற்ற சகோதர சகோதரிகளை விடவும் நான் மிகவும் விசேஷித்தவன் என்று நினையாதபடிக்கு அவர்கள் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் இதில் நன்கு சமநிலையோடு இருந்தார்கள் என்றே நாங்கள் நினைக்கிறோம். ஆனால் பாருங்கள், **இம்மாதிரியான ஒப்பிட்டுப்பார்க்கும் சோதனையில், விழுவதற்கும் வாய்ப்புள்ளது விழாமல் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.**

## ஐசுவரியமுள்ள ஒரு வாலிபனும் பேதுருவும்

ஐசுவரியமுள்ள ஒரு வாலிபன் இருந்தான், அவன் இயேசுவிடம் வந்து சீஷத்துவத்தைப் பற்றி விசாரித்துக்கேட்டான். அதற்கு அவர், 'உன்னிடம் இருப்பதை விற்று, ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, என்னைப் பின்பற்றி வா' என்று பதிலளித்தார். அவன் அதிகப்படியான ஐசுவரியத்தை வைத்திருந்ததால் வருத்தத்தோடு சென்றுவிட்டான்.

*இது நடந்து முடிந்த பிறகு, 'நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே. எங்களுக்கு என்ன கிடைக்கும்?' என்று பேதுரு கர்த்தரிடம் கேட்டது நமது ஞாபகத்திற்கு வருகிறது – ஆம், பேதுரு இங்கே ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறார். அவர் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனைக்கு உள்ளாகியிருக்க வாய்ப்புள்ளது.*

*பேதுரு, சீஷராகிய தாங்கள் தியாகம் செய்த இந்தப் பூமிக்குரிய விஷயங்களை ஒப்பிட்டுப் பார்த்து, 'எங்களுக்கு என்ன கிடைக்கும்?' என்கிறவாறு கேள்வியைக் கேட்டார். அதற்கு ஆண்டவரிடமிருந்து சுருக்கமாக, 'இந்த வாழ்நாளில் நீங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள், உங்கள் தற்காலிக தேவைகளும் பூர்த்தி செய்யப்படும், நீங்கள் என்னை இறுதிவரை உண்மையாகப் பின்பற்றினால், பரலோகத்தில் உங்களுக்கென்று பொக்கிஷமும் வைக்கப்பட்டிருக்கும்' என்பது போல பதில் வந்தது.* ***(மாற்கு 10:28,29)***


*பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய வேலை ஸ்தலமாக இருந்தாலும் சரி, நம்முடைய குடும்பமாக இருந்தாலும்சரி, நம்முடைய அயலகத்தாராக இருந்தாலும் சரி, நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களை நாம் கண்ணோக்கி, ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்புள்ளது, அப்போது கர்த்தர் சொன்ன இந்த மனப்பான்மையையே நம்மிடத்தில் வளர்ச்சியடைந்து காணப்பட வேண்டும். பேதுருவுக்கும், நம் அனைவருக்கும்கூட, இயேசு கொடுத்த அந்தப் பதிலைத்தான் நாம் நமது மனதின் முன்பாக வைத்துள்ளோமா? அதாவது, நமது புதிய சிருஷ்டி நாம் விட்டுவந்த விஷயங்களைக்காட்டிலும் நமக்குக் கிடைக்கப் போகும் வெகுமதிகளை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகிறதா? சிந்தித்துப் பார்க்கலாம்.*

*நமது தேவைகள் சந்திக்கப்படும் என்கிற வாக்குத்தத்தமும் நமக்கு இருக்கிறது. உலகத்தாரிடமோ மற்ற சகோதரரிடமோ காணப்படும் ஆசீர்வாதத்துடன் ஒப்பிடும்போது, நாம் நமக்கிருப்பவைகளில் மனத்திருப்தி அடைகிறோமா? சிந்தித்துப் பார்க்கலாம்.*

## இடிமுழக்க மக்கள்

அடுத்து, செபதேயுவின் குமாரராகிய யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு இடையே ஒருவேளை நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ள ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையானது எப்படியாக இருந்திருக்கும் என்பதைப் பார்க்கலாம். இருவரும் அப்போஸ்தலராக இருந்தார்கள், அதில் யோவான் இளையவராகவும், அநேகமாக யாக்கோபு மூத்தவராகவும் இருந்திருக்க வேண்டும்.

இங்கே ஒப்பிடுவதற்கான சோதனை என்னவாக இருந்திருக்கலாமென்றால், அப்போஸ்தலரில் யாக்கோபு முதலில் மரித்தவர், அதேசமயம் யோவான் கடைசியாக மரித்தவர். யாக்கோபு 15 வருட அர்ப்பணிப்பின் ஜீவியத்திற்குப் பிறகு மரித்தார், யோவானோ 65 வருட அர்ப்பணிப்பின் ஜீவியத்திற்குப் பிறகு மரித்தார். 'நான் எப்படி இவ்வளவு காலம் இந்த மாம்சத்திலேயே தரித்திருக்கிறேன்? நான் ஏதாவது சரியாகச் செய்யவில்லையா? ஒருவேளை நான் சரியாக வளரவில்லையா? நான் எனக்குத் தேவையான அனுபவங்களை இன்னும் கற்றுக்கொள்ளவில்லையா?' என்றவாறெல்லாம் யோவான் தனக்குள் யோசித்திருக்க வாய்ப்புள்ளது.



யோவான் முக்கியமாக செய்யவேண்டிய ஒரு வேலையை கர்த்தர் அவருக்காக வைத்திருந்த காரணத்தினால்தான், அவர் மரிக்காமல் இருந்தார் என்பதே அதற்கான எளிமையான பதிலாக இருக்க முடியும். அவர் யாக்கோபைக் காட்டிலும் நீண்ட

*காலமாக மாம்சத்தில் தரித்திருப்பது அவசியமாக காணப்பட்டது, ஏனெனில், 12 அப்போஸ்தலரில் அனைவரும் நித்திரையடைவதற்கு முன்பாக, உபத்திரவப்பட்ட ஆதிகால திருச்சபையை உறுதிபடுத்துவதற்கும், அவர்களுக்கு உதவிடுவதற்கும் யோவான் நீண்ட காலம் வாழ வேண்டியது கர்த்தருக்கு அவசியமாக காணப்பட்டது.*

*உண்மையில், இதேபோல நமது அன்பான வயதான சகோதர சகோதரிகளில் சிலரும்கூட, தங்கள் வயது ஒத்த மற்றவர்கள் ஓட்டத்தை முடித்து கடந்துபோய் கொண்டிருக்க, தாங்கள் ஏன் இன்னும் இங்கே இருக்கிறோம் என்று சொல்லுவதை நாங்கள் கேட்டிருக்கிறோம்.*

*சில சமயங்களில், தம்பதியரில் ஒருவர் ஓட்டத்தை முடித்திருப்பார்கள், இன்னொருவர் எஞ்சியிருப்பார், சில சமயங்களில் வயது வந்த பிள்ளை (an adult child) பெற்றோருக்கு முன்னதாகவே மரித்திருப்பார், சில சமயங்களில் ஒன்றாக ஞானஸ்நானம் எடுத்தவர்களில் ஒருவர் மட்டும் எஞ்சியிருப்பார்.*

*“தனிமையில் நான் வெளிச்சத்தில் நடப்பதைப் பார்க்கிலும், நான் இருளில் தேவனோடு நடந்திடுவேனே” என்பதுபோல, நாம் சகலத்தையும் கர்த்தரிடமே விட்டுவிட வேண்டும் என்பதை நினைவில் கொள்வது நல்லதாகும்.*

## பதினோராம் மணிவேளை வேலையாட்கள்

*திராட்சத்தோட்டமும் பதினோராம் மணிவேளை வேலையாட்களும் எனும் உவமையின் பாடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் குறைந்த நேரம் வேலை செய்த வேலையாட்கள், தங்களுக்குக் கிடைத்த அதே கூலியைப் பெற்றுக்கொள்வதைக் கண்டு, அதிக நேரம் வேலை செய்தவர்கள் முறுமுறுத்தார்கள். ஒருவேளை இது வணிக சம்பந்தமாக நடந்த ஒன்றாக இருந்திருந்தால், அவர்களின் முறையீட்டைப் புரிந்துகொள்வது நமக்கு எளிதாக இருந்திருக்கும், ஆனால் இது வணிக ரீதியிலான உவமை இல்லை.* ***ஒரு சக சீஷன், நம் குருவிடம் எவ்வளவு நீண்ட காலம் பணிபுரிந்தாலும்சரி அல்லது எவ்வளவு குறுகிய காலம்***

***பணிபுரிந்தாலும்சரி, அவருக்குக் கிடைத்த அதே அளவிலான வெகுமதியை நாமும் பெற்றுக்கொள்ள நேர்ந்தால், நாம் அதில் மனத்திருப்தியடைய வேண்டும். அதேசமயம் மாம்சத்தில் கர்த்தருக்காக இத்தனை நீண்ட காலம் ஊழியம்செய்வதற்கு நமக்கு கிடைத்திருக்கும் பாக்கியத்தைக் குறித்தும் மகிழ்ந்து களிகூர வேண்டும் என்பதை கற்பிக்கும் ஓர் உவமையாக இது காணப்படுகிறது.***

***ஆம், சத்தியத்தில் புதியவர்கள் அல்லது இளையவர்கள், (நீண்ட காலம் ஓட்டத்தில் காணப்படுகிற) நமக்குக் கிடைத்தது போன்ற அல்லது இன்னும் அதிகமான ஊழிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதைக் காணும்போது, நாம் யாருமே அதுகுறித்து வெறுப்போ கோபமோ கொள்ளக்கூடாது.***

## லூசிபரும் லோகோசும்

*__ஏசாயா 14:12-15__ வரையிலான வசனங்களில், '__உன்னதமானவருக்கு ஒப்பாவேன்__' என்று லூசிபர் எனும் சாத்தான் தன் மனதில் நினைத்ததாக வாசிக்கிறோம். அவன் தன்னை தேவனோடு ஒப்பிட்டுக் கொண்டான். உங்களால் இதை கற்பனை செய்ய முடிகிறதா? ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனைதான் லூசிபரை தவறாக வழிநடத்தியது. அந்தச் சோதனையில் அவன் தோல்வியடைந்தான், ஏனெனில் அவனது மனப்பான்மை அவனைக் கசப்புள்ளவனாக்கி, அவனது பெருமை அவனை இறுமாப்படைய செய்தது.*

*மறுபுறம், ஒப்பிட்டுப் பார்க்கும் அதே சோதனை சம்பந்தமாக __பிலிப்பியர் 2:5-10__ வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ளபடி, லோகோசாகிய இயேசு, முன்பு ஆவியின் சுபாவத்தில் காணப்பட்டார் என்று பவுல் கூறுகிறார். அப்போது அவர் திவ்ய சுபாவத்தில் இருக்கவில்லை, மாறாக ஆவியின் சுபாவத்தில் இருந்தார். யாவே தேவனே திவ்ய சுபாவத்தில் இருந்தார், இருப்பினும் இயேசுவோ தம்மை தேவனுக்குச் சமமாக்கிக்கொள்ள முயற்சிக்கவில்லை. லூசிபர் செய்ததற்கு நேர்மாறாக இயேசு செய்தார். ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையில், இயேசு தமக்கும், தம்முடைய பரமபிதாவிற்கும்*

*இடையே இருக்கும் சுபாவரீதியான வித்தியாசத்தைப் பார்த்தபோது, அவர் மறுப்பேதுமின்றி தாழ்மையுடன் அதை ஏற்றுக்கொண்டார்.*

*இப்படியாக, ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையானது மனித குடும்பத்தில் மாத்திரம் காணப்படவில்லை.*

## யுஸ்துவும் மத்தியாவும்

*அடுத்து நாம் யுஸ்து மற்றும் மத்தியா பற்றி பார்க்கலாம். யூதாஸ்காரியோத்து தனது அப்போஸ்தலப்பட்டத்தை இழந்தபோது, பதினொரு அப்போஸ்தலரும் அந்த ஸ்தானத்தில் வேறொரு நபரை ஏற்படுத்தி வைக்க நினைத்து, அவர்கள் யுஸ்து மற்றும் மத்தியா என இருவருக்கிடையே சீட்டுப்போட்டு, இறுதியில் மத்தியா 12 அப்போஸ்தலரில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது நமக்குத் தெரியும். அது அவ்வாறு இருந்திருக்கக்கூடாது, கர்த்தரே தமது சொந்த 12 பேரையும், பிற்பாடு பவுலையும் தேர்ந்தெடுத்தார். ஆனால், இங்கேயும் ஓர் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனை இருந்திருக்க வாய்ப்புள்ளது என்றெண்ணத் தோன்றுகிறது. யுஸ்து தேர்ந்தெடுக்கப்படாததால் அவர் என்ன நினைத்திருக்க வாய்ப்புள்ளது? யோசித்துப் பாருங்கள். அதேபோல, மத்தியா தன்னை கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை, பவுலைத்தான் தெரிந்துகொண்டார் என்பதை பிற்பாடு அறிந்தபோது, அங்கே ஓர் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனை நேர்ந்திருக்க வாய்ப்புள்ளது.*

***நிச்சயமாக, யுஸ்துவும் மத்தியாவும் கர்த்தருடைய வழிகாட்டுதலை மனத்தாழ்மையோடு மறுப்பேதுமின்றி ஏற்றுக்கொள்ளும் ஓர் இனிமையான மனப்பான்மையைக் பெற்றிருந்திருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். நாமும்கூட அவ்வாறு இருக்க வேண்டும். நாம் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியராக இல்லாமல், அதற்குப் பதிலாக நம்முடைய சகோதரரில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், நம்மால் மனத்தாழ்மையோடு அதனை மறுப்பேதுமின்றி ஏற்றுக்கொள்ள முடிகிறதா? சிந்தித்துப் பார்க்கலாம்.***

ஒருவேளை நாம் உடன் ஊழியராக இருந்தாலும்கூட, மற்றவர்களை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஊழியம் மற்றும் வாய்ப்பு உள்ளவர்கள் யாராவது இருக்கிறார்களா? அங்கேயும் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனை வரும்.

## பேதுருவும் பவுலும்

***கலாத்தியர்*** *2 ம் அதிகாரத்தில், உபதேசரீதியில் பேதுருவுக்கும் பவுலுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு சம்பவத்தில் என்ன நடந்தது? ஒப்பிட்டுப் பார்த்தால், பவுல் என்பவர் புதிதாக/newcomer வந்தவர் (பேதுருவுக்கு பின் வந்தவர்). இவர் ஆதிகால சபையைத் துன்புறுத்தியவராகவும் காணப் பட்டார். அதேசமயம், பேதுருவுக்கோ பரலோகத்தின் கதவைத் திறப்பதற்கான திறவுகோல்கள் கொடுக்கப்பட்டன, அதாவது சபை ஆவதற்கான பரம அழைப்பினை முதலில் யூதருக்கும், பின்னர் புறஜாதிகளுக்கும் கொடுக்கும் வாய்ப்பு பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது. இருப்பினும், புறஜாதியரை யூதர் முறைமையாக நடக்கும்படி கட்டாயம் பண்ணுவது பற்றிய இந்த விவாதத்தில் யார் சரியான தரப்பில் காணப்பட்டார்? ஆம், பவுலே சரியாகச் சொன்னார். இது இரண்டு அப்போஸ்தலருக்கு இடையேயான ஓர் உபதேசரீதியான வாதமாக இருந்தது. மேலும்*

*பேதுருவுக்கு பின் புதிதாக வந்தவராகிய பவுல்தான் இங்கு சரியாகச் சொன்னார்.*



பவுலின் நிலைப்பாடு நமக்குத் தெரியும், ஆனால், இங்கு வரும் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையில் பேதுருவின் மனப்பான்மை என்னவாக இருந்தது? பாருங்கள், பேதுரு தன்னுடைய நிருபத்தில், **2 பேதுரு 3:15,16** ஆகிய வசனங்களில் – பவுல் அவருடைய நிருபங்களில் ஆழமான விஷயங்களை எழுதியிருப்பதையும், அவர் சொன்னவைகளில் சில மிகவும் ஆழமான காரியங்கள் என்பதால், அவைகள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது என்பதையும் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டு – "**நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுல்**" என்று பேதுரு எழுதியிருப்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். பேதுரு பவுலின் உபதேசரீதியிலான திறன்களையும் நுண்ணறிவுகளையும் அங்கீகரிக்கிறார். சரியான நேரத்தில், பேதுரு அந்த ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையை வெற்றிகரமாக கடக்கலானார்.

## அடிமைகளும் எஜமானரும்

ஆரம்பக்கால சபையில், வேலைக்காரருக்கும் எஜமானருக்கும் (Servants and Masters) இடையே எப்பேர்ப்பட்ட சோதனை இருந்திருக்க வேண்டும். இதைக் குறித்து நான் அடிக்கடி யோசித்ததுண்டு, நீங்களும் யோசித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மூன்று வெவ்வேறு இடங்களில் பவுல் வேலைக்காரராக இருந்த சகோதரருக்கு எழுதியிருக்கிறார் – அப்படி வேலைக்காரர் என்று பயன்படுத்தப்பட்ட வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை அடிமைகள் என்பதாகும். அவர் அடிமைகளுக்கும் எழுதியிருக்கிறார், எஜமானருக்கும் எழுதியிருக்கிறார்.

இந்த இரு வகுப்பாரும் கிறிஸ்தவ விசுவாசிகளே, இருப்பினும் என்ன கவனிக்கிறோம் என்றால், அவர் 'உங்கள் அடிமைகள் அனைவரையும் விடுவியுங்கள்' என்று எஜமானருக்கும், 'உங்கள் சுதந்திரத்திற்காக உங்கள் எஜமானருக்கு எதிராக கிளர்ச்சி செய்யுங்கள்' என்று அடிமைகளுக்கும் எழுதவில்லை என்பதாகும்.

மாறாக, அவர்கள் இருவரையுமே, தங்களுக்குரிய

பொறுப்பிலும், தங்களுடைய வெவ்வேறான ஸ்தானங்களிலும், கிறிஸ்தவருக்குரிய குணலட்சணத்தோடு, செயல்படும்படிக்கே எழுதுகிறார். சகோதர சகோதரிகளே, ஒரு கிறிஸ்தவ எஜமானனுக்கு அடிமையாக இருப்பதில் இருக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனை எவ்வளவு கடினமாக / கஷ்டமாக இருந்திருக்குமல்லவா!



வாழ்க்கையின் வெவ்வேறு அனுபவங்களில், நாம் அடிமைகளாக கட்டுண்டிருக்க வாய்ப்புள்ளது. உதாரணம்: ஒருவேளை அர்ப்பணிக்கப்படாத வாழ்க்கை துணை எனும் சோதனையோடு நாம் கட்டப்பட்டிருக்கலாம். நம்மை பாரமாக்கி, நாம் விரும்புவது போல் பயணம் செய்யவோ அல்லது சகோதர சகோதரிகளை உபசரிக்கவோ சுதந்திரம் இல்லாமல் நம்மை மட்டுப்படுத்துகிற பொறுப்புகளோடு நாம் கட்டப்பட்டி ருக்கலாம். மற்ற சகோதர சகோதரிகள் தங்கள் விருப்பப்படி பயணம் செய்யவும், தங்கள் விருப்பப்படி உபசரிக்கவும், தாங்கள் விரும்பும் எல்லா கூட்டங்களுக்கும் செல்லவும் அவர்களுக்குச் சுதந்திரம் இருக்க, நாமோ நமது வேலை ஸ்தலத்தில், கூட்டங்களுக்குச் செல்வதைத் தடைசெய்யும் சில வகையான

*சூழ்நிலைகளோடு நாம் கட்டப்பட்டிருக்கலாம். இவையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் ஒரு சோதனையாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது.*

## உடல்நலப் பிரச்சினைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது

*அடுத்து, உடல் ஆரோக்கியம் எனும் சோதனை உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் குறித்து, "**அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின**" என்று **அப்போஸ்தலர் 19: 12** ல் நாம் வாசிக்கிறோம். மறுபுறம், 2 **கொரிந்தியர் 12**ல், பரி.பவுல் தனது மாம்சத்திலுள்ள முள் தன்னை விட்டு நீங்கும்படி கர்த்தரிடம் மூன்று முறை ஜெபித்தது குறித்தும் உங்களுக்கு நினைவிருக்கலாம். **கலாத்தியர்** 4 ம் அதிகாரமானது அந்த முள் அவருடைய பார்வை குறைபாடு எனத் தெரிவிக்கிறது. அவர் கர்த்தருடைய மகிமையைக் கண்டபோது, அவருடைய பார்வை பறிபோனது; அவருக்கு மீண்டும் பார்வை கிடைப்பதற்கு ஓர் அற்புதம் தேவைப்பட்டது. இதுவே அவருடைய மாம்சத்தில் ஒரு முள்ளாக காணப்பட்டது. மேலும் அது அவரது வாழ்க்கையில் பெரும் சோதனையாக இருந்தபடியால், கர்த்தருக்கு சித்தமானால் அவர் அதை சொஸ்தமாக்கட்டும் என்று ஜெபம் செய்தார்.*

*ஆனால் அது கர்த்தருடைய சித்தமாக இருக்கவில்லை. மாறாக, இந்த மோசமான உடல்நிலை எனும் சோதனைக்கு பவுல் தன்னை தாழ்மையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதும், அவ்வாறு செய்வதன் மூலமாக, அதிகப்படியான கர்த்தருடைய பலம் தன்னிலும், தன் மூலமாகவும் கிரியை செய்து வருவதை அவரால் வெளிக்காண்பிக்க முடியும் என்பதுமே கர்த்தருடைய சித்தமாக இருந்தது. இப்படியாக பவுல் மனத்தாழ்மையாக கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த காரியமானது நமக்கும்சரி, மற்றவர்களுக்கும்சரி, எக்காலத்திற்குமான ஒரு முன்மாதிரியாக இருக்கும்.*

*நாம் நமது உடல்நலப் பிரச்சினைகளை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோமா? நமக்கு உடல் நலம் சரியில்லாமல், படுத்த படுக்கையாகி அவதிப்படும்போதோ அல்லது உடல் நலக்குறைவுகளைச் சுமந்துகொண்டு நடமாடும்போதோ, 'கர்த்தாவே, மற்ற சகோதர சகோதரிகள் மாத்திரம் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார்களே, அதன் காரணமாக அவர்களுக்கு அதிகமான ஆவிக்குரிய வாய்ப்புகளும் கிடைக்கின்றதே?!' என்று வினவும் மனப்போக்கு நம்மிடம் காண வாய்ப்புள்ளது.*

*சகோதர சகோதரிகளே, இது ஒரு கடுமையான, அதேசமயம், மிகவும் பொதுவாக காணப்படும் ஒரு சோதனையாக இருக்கின்றது. ஆனாலும் பாருங்கள், பரி. பவுலுடைய காரியத்தில் நாம் பார்க்கின்றபடி, மற்றவர்களைக் குணப்படுத்திய அவர், அந்த வரத்தினைக் கொண்டு தன்னைத்தான் குணப்படுத்திக் கொள்ளவில்லை. அது குறித்து அவர் கர்த்தரிடமே மன்றாடினார், அப்படி மன்றாடியபோது, அவருடைய கிருபையால் அதைத் தொடர்ந்து பொறுத்துக்கொள்ளுமாறே பதில் வந்தது. (அவரும் அப்பதிலுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார்.) (இது நமக்கு ஒரு முன்மாதிரியாகும்.)*

## உனக்கு என்ன?

*இப்போது நாம்* ***யோவான் 21:18-22*** *வரையிலான வசனங்களை வாசிக்கலாம்,* **“நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைக் கட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன்** *(பேதுரு)* **தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும் படியாக இப்படிச்** *(இயேசு)* **சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை** *(பேதுருவை)* **நோக்கி: என்னைப்**

***பின்பற்றிவா என்றார். பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.***"

இவையெல்லாம் அன்று காலை கலிலேயா கடற்கரையில் நடந்தவையாகும். பேதுருவுக்கு மூன்று கடிந்துரைகள் *(reprovals)* கிடைத்தன, இறுதியாக கர்த்தரிடத்தில் சமாதானம் பெற்றுக்கொண்டார். ஆனாலும், பேதுருவுடைய கடைசி நாட்களில் அவருக்கு என்ன நடக்கும் என்பதை இயேசு தீர்க்கதரிசனமாக கூறினார்.

அது ஓர் இனிமையான தீர்க்கதரிசனமாக இருக்கவில்லை. அவர் தனது முதுமையில், சிறையில் அடைக்கப்பட்டு, கொடிய மரணம் அடைவார் என்று சொல்லப்பட்டது. இருப்பினும், அது தேவனை மகிமைப்படுத்தும் மரணமாகவே இருக்கும் என்றும் சொல்லப்பட்டது, அவர் இறுதிவரை உண்மையுள்ளவராக இருப்பார் என்பதையே அது காண்பித்தது.



*பேதுருவோ அல்லது மற்றவர்களோ இன்னும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளும்போது, பேதுருவோடு நம்மால் அதிகமாக அனுதாபங்கொள்ள முடிகிறது. (கர்த்தரது கவனம் தன்மேல் திரும்பியிருக்கையில்,) அவர் தனது முன்யோசனையின்றி சட்டு சட்டு என்று செயல்படும் சுபாவத்தினால் (spontaneous nature) ஆட்கொள்ளப்பட்டு, என்ன செய்வதென்று அறியாமல், இயேசுவின் கவனத்தை தன்னிடமிருந்து விலக்கி, யோவானிடமாக திசை திருப்ப முயன்றார் என்று நாம் சொல்லலாம். ஆனால் இயேசுவோ அவர்மீது இருந்த தம்முடைய கவனத்தை விலக்கவில்லை. மாறாக, அவர் பேதுருவுக்கும், நம் அனைவருக்கும்கூட,* ***மிகவும் ஆழமானதொரு வாழ்க்கை பாடத்தைக்*** *கொடுத்தார்:* ***ஒவ்வொருவரும் அவரவருடைய அனுபவங்களை சக சகோதர சகோதரிகளுடனோ அல்லது வேறு யாருடைய அனுபவங்களுடனோ ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது, மாறாக நாம் இயேசுவைப் பின்பற்றுவதிலேயே தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.***

*இப்போது இது சம்பந்தமான ரீப்ரிண்ட்ஸ் 4183/4184 ல் இருந்து நாம் சில பகுதிகளை வாசிக்க விரும்புகிறோம். மிகவும் சிறப்பான கருத்துகள், "****உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றிவா****" எனும் கிளை தலைப்பின் கீழாக காணப்படுகின்றன:* ***(புதுச்சிருஷ்டியில் ஒழுங்குமுறைகள் புஸ்தகம், பக்கம் 355,356)***

> *"இது கர்த்தருடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்வதற்கு இருப்பதிலேயே கடினமான பாடமாகவும், அதே சமயம் மிகவும் முக்கியமான பாடமாகவும் காணப்படுகின்றது. நாம் சுற்றிப் பார்க்கவும், நமக்குத் கர்த்தரால் அனுமதிக்கப்படுகின்றதான அதே அளவிலான சிட்சைகள் அல்லது சோதனைகள் அல்லது பிரச்சனைகள் அல்லது பாரங்கள் ஏன் சகசீஷன் ஒருவருக்கு அனுமதிக்கப் படவில்லை என்று சிந்திக்கவும் முற்படுவோமானால் மற்றும் கர்த்தர் குறித்தும், அவரது ஞானம் குறித்தும், அவரது செய்கைகள் குறித்துமுள்ள விஷயத்தில் நியாயந்தீர்க்கிற வர்களாகுவதற்கு நாம் நம்மை அனுமதிப்போமானால்,*

*விளைவு நமக்கே பாதகமாய்க் காணப்படும். இது நம்முடைய சமாதானத்தை அழித்துப்போடும் மற்றும் நம்முடைய விசுவாசத்தினை வலுவற்றதாக்கிவிடும் மற்றும் இராஜ்யத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திடுவதற்கு அவசியமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்குத் தடையாகக் காணப்படும். தெய்வீக வழிநடத்துதல்கள் / செய்கைகள் குறித்து இத்தகைய விமர்சனங்கள் / குறைக் கூறுதல்கள் நம்முடைய மனங்களில் தோன்றுமானால், பேதுருவிடத்தில் நமது கர்த்தர் கூறின பதிலைப் போலவே நாமும் நம்மிடம், "உனக்கென்ன, நீ பின்பற்றிவா. இந்தக் காரியங்களை எல்லாம் ஒழுங்குப்படுத்துவதற்கு நீ திராணியற்றவன்; இன்னும் ஆண்டவர் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் அனைத்தையுமே உனக்கு விவரித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை, அது தகுதியாயும் இராது. விசுவாசத்தையும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தலையும், நம்பிக்கையையும் கற்றுக்கொள்வதே உனக்கு நலமானதாய் இருக்கும்" என்று உடனடியாகக் கூறிட வேண்டும். நம்மில் எந்த இரண்டுபேரும் ஒரே மாம்ச சுபாவத்தினைக் கொண்டிருப்பவர்கள் அல்ல, ஆகையால் கர்த்தருடைய கரத்தினின்று ஒரே மாதிரியான பயிற்சியினை அவசியமாய்ப் பெற்றிருப்பவர்களாக எந்த இரண்டு பேரும் காணப் படுவதில்லை. நாம் அவரது ஞானம் மற்றும் அன்பின் மீது நம்பிக்கைக் கொண்டிருக்கின்றோம்; நமக்கான சோதனைகள் அதிகமாய் இருக்குமானால், அதற்கேற்ப நம்முடைய ஆசீர்வாதங்களும் அதிகமாய் இருக்கும் என்றும், "**என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்**" என்று கர்த்தர் பவுல் அப்போஸ்தலரிடம் கூறினது போன்று, நம் ஒவ்வொருவரிடமும் கூறுவார் என்றும் உணர்ந்து, நமது நம்பிக்கையினை வெளிப்படுத்திடுவோமாக (2 **கொரிந்தியர்** **12:9**)."*

*மெய்யாகவே இது கர்த்தரை நன்கு பின்பற்றின ஒருவரிடமிருந்து வந்த ஞானமான அறிவுரையாகும்.*

"**ஒப்பீடுகள் அருவருப்பானவை / comparisons are odious**" என்பது ஒரு பொதுவான பழமொழியாகும். அதாவது, அரிதாகவே ஒப்பீடுகளிலிருந்து ஏதேனும் நன்மை உண்டாகும்.

ஒருவேளை பிரியமான பேதுரு அன்று காலை கடற்கரையில், கர்த்தருடனான தனது உறவு குறித்து ஊக்கமிழந்தவராய், தனக்குள் ஓர் ஐயப்பாடு உணர்வுடன் (sense of insecurity) போராடிக் கொண்டிருந்திருக்கலாம். சில சமயங்களில் இதே போன்ற போராட்டம் நமக்குள்ளும் காணப்பட வாய்ப்புள்ளது. இது நம்மை எளிதில் மற்றவரோடு ஒப்பிடுவதற்கு வழிவகுத்திடும். சகோ. ரசல் அவர்கள் கூம் தொகுதியில், நம்மைக் குறித்து "வெவ்வேறு குணாதிசயங்கள்" (different temperaments) கொண்டவர்கள் என எழுதுகிறார். தன்னம்பிக்கை அதிகம் உள்ள நம்மில் சிலருக்கு இந்தப் போராட்டம் அதிகமாக இருக்காது, போதிய நம்பிக்கை (confidence) இல்லாத மற்றவர்களோ, சில சமயங்களில், மற்றவர்களைக் காட்டிலும் கர்த்தருடனான தங்களது உறவு குறைந்து காணப்படுகிறது என்பதற்கான ஒரு சான்றாக இந்தப் போராட்டம் இருக்குமோ என்று சிந்திப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் இயேசுவிடமிருந்து பேதுருவுக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பாடமானது, நம் அனைவருக்குமே பொருந்தும் – **உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றிவா!**

## "கர்த்தர் நம்மை மற்றவர்களுடன் ஒப்பிடுவதில்லை."

சிறப்பானதொரு அளவீடோ அல்லது தரநிலையோ இருந்தால், அதோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்து, நமது முன்னேற்றத்தையும், நாம் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறோம் என்பதையும் அளவிடலாமே அல்லது கணக்கிடலாமே – அப்படி ஓர் அளவீடோ அல்லது தரநிலையோ இருந்தால் நன்றாக இருக்குமே என்று நாம் விரும்புவது மிகவும் இயல்பானதே. ஆனால், **சக விழுந்துபோன ஒரு மனிதனை, நம்மை அளவிடுவதற்கான அல்லது ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான ஒரு தரநிலையாக, வைத்துக்கொண்டோமேயானால், கிறிஸ்தவராகிய நமக்கு அத்தரநிலை மிகவும் தரம் குறைந்ததாக இருக்கும்! நமக்கென்று வைக்கப்பட்டுள்ள ஒரு தரநிலை உள்ளது, அது**

**தேவனுடைய வார்த்தையிலேயே காணப்படுகிறது. அது அவருடைய குமாரனாகிய இயேசுவில் முன்மாதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசு பேதுருவிடம் கூறியது போல், (மற்றவரை அல்ல, மாறாக) 'என்னைப் பின்பற்றிவா!' (Follow Me!) என்பதே நமக்கான புத்திமதியும்கூட.**

## பரி. பவுலுடைய ஆலோசனை

நாம் நமது சகோதர சகோதரிகளை நல்ல முன்மாதிரிகளாகப் பார்க்கலாம், ஆனால் அவர்களை நம்மோடு ஒப்பிட்டுப் பார்க்காதபடிக்குக் கவனமாக இருப்போமாக. நம்மிடையே அதிகமதிகமான பற்பல வேறுபட்ட அம்சங்கள் காணப்படுகின்றன, அவற்றில் பலவற்றை நம்மால் நாமே ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாதவர்களாய் இருக்கிறோம். ஆனால் நம் ஒவ்வொருவருக்கிருக்கும் வரம்புகள், சூழ்நிலைகள், தனித்தன்மைகள், நம் ஒவ்வொருவரையும் நெருக்கி நிற்கிற பாவங்கள், ஒவ்வொருவருக்கிருக்கும் பல்வேறு பொறுப்புகள், வெவ்வேறான தாலந்துகள் முதலியவைகளை **தேவன் அறிவார். நமது பரமபிதா மாத்திரமே அறிவார்.**

*1 கொரிந்தியர் 11:1ல்,* *"**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின் பற்றுகிறவர்களாயிருங்கள்**"* என்று பரி. பவுல் கூறுகிறார். இதேபோன்ற சிந்தனைகள், ***பிலிப்பியர் 3:17*** மற்றும் ***1 தீமோத்தேயு 4:12*** ஆகிய வசனங்களிலும் காணப்படுகின்றன. ஆம், மற்றவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் பார்த்து, அந்த நல்ல முன்மாதிரியை



நாமும் பின்பற்ற விரும்புகிறோம். இருப்பினும், சந்தேகத்திற்கு இடமின்றி, பவுல் என்ன சொல்ல வருகின்றார் என்றால், ***தனது வாழ்க்கை முறையை உற்றுகவனித்து, அதிலிருந்து நாமும் நமது அர்ப்பணிப்பின் பொருத்தனைகளை நிறைவேற்றுவதிலும், நமது பரிசுத்தமாகுதலை ஆழமாக்குவதிலும் எவ்வாறு காலத்தையும் தாலந்தையும் பிரயோஜனமாக பலிசெலுத்தலாம் என்பதைக் கற்றுக்கொள்ளலாம் என்பதேயாகும். (மாறாக, ஒப்பிட்டுப் பார்க்க சொல்லவில்லை!)***

## ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள்

***சகோதர சகோதரிகளே, நாம் ஒவ்வொருவரும் ஒரு தனித்துவமான கைவேலைப்பாடாக இருக்கிறோம்.*** ***1,44,000*** பேர் அடங்கிய கிறிஸ்துவின் அந்த ஆவிக்குரிய சரீரத்தில் ஒரு தனித்துவமான ஸ்தானத்தை அடைவதற்காக தேவன் நம்மில் கிரியை செய்தும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நம்மை வளர்த்தியும் வருகிறார். மேலும் நம்மால் கிரகிக்க முடியாத ஒரு ஸ்தானத்திற்காக மிகத் துல்லியமாக அவர் நம்மை செதுக்கியும், வடிவமைத்தும் வருகிறார்.

***கிறிஸ்தவராகிய நாம் எந்தவகையில் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டுள்ளோம் என்பதற்கு உதாரணமாக மனித சரீரத்தை பவுல் பயன்படுத்திய விதம் அற்புதமானது!*** இதைக்காட்டிலும் நமது ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனைகளைத் தடுப்பதற்கான சிறந்ததொரு வழியை நம்மால் சிந்தித்துப் பார்க்க முடியாது. அவர் விளக்குவது போல் *(**1 கொரி. 12**ல்)*, ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்ட அனைவரும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறார்கள். அவரே தலை. எவ்வாறு ஒரு மனித சரீரத்தில் தலையானது சரீரத்தின் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கிறதோ அதுபோலவே, அவர் தமது சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புக்கும், தனித்தனியாகவும் ஒட்டு மொத்தமாகவும் அவற்றிற்கான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறார்.

***ஒரு கையாக இருக்கும் அங்கத்தினன் தன்னை மற்ற சரீர***

***அங்கத்தினரை விடவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராகவோ அல்லது குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவராகவோ நினைக்கக்கூடாது என்று பவுல் கூறுகிறார். மாறாக, ஒரு சரீர அங்கத்தால் செய்ய முடிகிற வேலையை, மற்றொரு அங்கத்தால் செய்ய முடியாது, எனவே, உண்மையில் நாம் ஒருவரையொருவர் முழுநிறைவாக்குகிறவர்களாய் இருக்கிறோம் (we complement one another).***

*பின்வருபவை மிகச் சிறந்த வசனங்களாக இருக்கின்றன – I கொரி. 12:22 – 27, "**சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவை களுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சண மில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்; நம்மில் இலட்சண முள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக் கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக் கிறீர்கள்.**"*

***திருவிவிலியம்:** "மாறாக, உடலில் மிக வலுவற்றனவாய்த் தோன்றும் உறுப்புகளே மிகவும் தேவையானவையாய் இருக்கின்றன. உடலின் மதிப்புக் குறைவான உறுப்புகள் என நமக்குத் தோன்றுபவற்றிற்கே நாம் மிகுந்த மதிப்புக் கொடுக்கிறோம். நம் மறைவான உறுப்புகளே மிகுந்த மதிப்புப் பெறுகின்றன. மறைந்திராத நம் உறுப்புகளுக்கு அது தேவையில்லை. மாறாக, மதிப்புக் குறைந்த உறுப்புகளுக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தே கடவுள் உடலை ஒன்றித்து உருவாக்கினார். உடலில் பிளவு ஏற்படாமல், ஒவ்வொரு உறுப்பும் மற்ற உறுப்புகளின் மீது ஒரேவிதக் கவலை கொள்ளவேண்டுமென்றே இப்படிச் செய்தார். ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும்*

**சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும். நீங்கள் கிறிஸ்துவின் உடல்: *ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள்.*”**

*நாம் பலவீனராகவோ, பலமுள்ளவராகவோ, நன்றாக பழகக்கூடியவராகவோ, கூச்ச சுபாவமுள்ளவராகவோ, நன்கு பேசக்கூடியவராகவோ அல்லது அமைதியானவராகவோ, உடல்நலத்துடன் போராடுகிறவராகவோ, வலிமையானவராகவோ, ஏழைகளாகவோ அல்லது பணக்காரராகவோ, சிறந்த மாணவராகவோ அல்லது இன்னும் முயற்சிப்பவராகவோ, பொது ஜெபம் ஜெபிப்பதில் பதட்டமானவராகவோ அல்லது நன்கு ஜெபிப்பவராகவோ இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு அங்கத்தினனும் பாராட்டப்பட / மதித்துணரப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு அங்கத்தினரும் அந்த ஒரே சரீரத்தில் தனித்துவமாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்வதற்கு நம்மைப் பெரிதும் ஊக்குவிக்கும் வகையில் இந்த வசனங்களும், இங்குள்ள ஆவிக்குரிய பாடங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.*

## முடிவுரை

*6 ம் தொகுதியாகிய “புதுச்சிருஷ்டி” எனும் புத்தகத்தில், பக்கம் 174, 175ல் (ஆங்கிலத்தில் பக்கம் 146) காணப்படும் சில ஊக்கமளிக்கும் கருத்துகளோடு நாம் இப்பாடத்தை நிறைவு செய்யலாம்:*

> *“நமக்கு விரோதமான சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும், நம்மைக் கடுமையாக நியாயந்தீர்க்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார் என்று நாம் நினைக்கக் கூடாது; ஆனால் இன்னொரு பக்கம், நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில், நம்முடைய மீட்புக்காக வழிசெய்யும் அளவுக்கு அவருடைய நன்மையும் கிருபையும் இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நிச்சயமாக, நாம் அவருடைய பிள்ளைகளாகி, ஆவியினாலே ஜெநிப்பிக்கப் பட்ட பின்னர், மாம்சத்தின்படி அல்லாமல் ஆவியின்படி அவருடைய வழிகளில் நடக்க நாடும்போது, நம்முடைய*

*சிறப்பான முயற்சிகள் தட்டுத்தடுமாறி ஏறெடுக்கப் பட்டாலும்கூட, இப்படிப்பட்ட நேரங்களில் நாம் "மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாக" இருந்தபோதிருந்ததைக் காட்டிலும் இப்போது அவரது அன்பு இன்னும் ஏராளமாயிருக்க வேண்டும். ஒரு நல்ல பூலோகத் தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குவதுபோன்று தேவனும் தம்மிடம் பயபக்தி காட்டுகிறவர்களுக்கு இரங்குகிறார் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சிறந்த பூலோக நண்பர்களையும் அவர்களுடைய இரக்கம், அன்பு, மனதுருக்கம் ஆகியவற்றை மனதிற்கொண்டு, இதற்கு இணையாக ஒன்றை வைத்துப் பார்க்கும்போது, தேவனுடைய சிருஷ்டிகளில் மிகச்சிறந்தவர்கள் காட்டும் இரக்கம், அன்பு, மனதுருக்கத்தைக் காட்டிலும் தேவன் அதிக அன்பும், உண்மையுமுள்ளவராக இருப்பதைக் காணலாம். இப்பேர்ப்பட்ட விசுவாசத்தை, நம்பிக்கையை அவர் வரவேற்கிறார்; அதற்கு வெகுமதியும் அளிக்கிறார். ஆரம்பத்தில் ஆண்டவரிடம் வரும்படியாக போதுமான அளவு விசுவாசம் பெற்றிருந்த அனைவரும், அவர்கள் விருப்பப்பட்டால், அவரிடத்தில் அனுதினமும் அவர்களுடைய சோதனைகளோடும், கஷ்டங்களோடும், குறைபாடுகளோடும் வருவதற்குப் போதுமான அளவு விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்."*

**ஆம்! நம்முடைய பரமபிதாவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் நாம் வெற்றிபெற வேண்டும் என்றே விரும்புகிறார்கள் – நாம் ஒவ்வொருவரும் தனித்துவமாகவும், அவரது சாயலிலும், அவருக்கு மகிமை சேர்க்கும் வண்ணமாகவும் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.**

***(கிறிஸ்து எனும் உன்னத தரநிலையோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்து, தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த உன்னத சாயலடைய முழுமையாக முயற்சிப்போமாக!***

***தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!)***

# கூடுதலான சத்திய கருத்துகள்

## எவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும் சோதனையைச் சரியாக கையாள்வது?

*சகோ. ரசல் அவர்களுடைய எழுத்துகளிலிருந்து எடுக்கப் பட்ட சில ஆலோசனைகள்:*

***R5842:*** *"...'**மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்' (பிலி. 2:3)** என்கிற பரி. பவுலுடைய கட்டளையை நாம் எந்த விதத்தில் புரிந்து கொள்ள வேண்டும்? இவ்விதமாய்: அதாவது, கர்த்தருடைய ஜனங்களில் இருவராகிய யாரேனும் ஒன்றுபோல் இருப் பதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் சரியான பார்வை இருக்கும் பட்சத்தில், நாம் நம்முடைய சொந்த தாலந்துகளைக் குறித்து தாழ்மையாகவே எண்ணுவோம். நாம் இவ்வாறாகவே எண்ணலாம், அதாவது, 'என்னிடம் இன்னின்ன பண்பும், தாலந்தும், குணமும் காணப் படுகிறது; அதற்கேற்றாற்போல் நான் கர்த்தருக்கு கணக் கொப்புவிக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய சகோதரன் அல்லது என்னுடைய அயலானைக் காட்டிலும் எனக்கு அதிகமாய் உள்ளது என நான் எண்ணும் தாலந்தை என்னால் முடிந்த மட்டும் உண்மையாய் பயன்படுத்துகிறேனா என யோசிக்கின்றேன். என்னிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அவர்களிடம் குறைவாக இருந்தாலும், என்னிடம் இருப்பதை நான் பயன்படுத்துவதைக் காட்டிலும், அவர்கள் தங்களிடம் இருக்கும் அனைத்தையும் வெற்றியடைய வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தோடு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். ஒருவேளை இது உண்மையாக இருந்தால், இந்த விஷயத்தில் அவர் என்னைவிட சிறந்தவராக இருக்கிறார்.'"*

*"... நாம் நம்மை தாழ்மைப்படுத்த வேண்டும் என்பது நமக்கு எவ்விதமான தாலந்தோ, ஆற்றலோ, திறமையோ இல்லை என்று எண்ண வேண்டும் என்று அர்த்தம் கொள்வதாக நினைக்கத் தேவை இல்லை. அத்தகைய எண்ணம் புத்தியீனமாய் இருக்கும். மாறாக, நம்மை குறித்து தெளிந்த புத்தியோடு நிதானித்துப் பார்க்க*

*வேண்டும். நம்முடைய ஆற்றல்கள் (powers) அனைத்தும் தேவனிடத்தில் இருந்து வருகின்றன என நாம் எண்ண வேண்டும். எனவே, நம்முடைய அயலகத்தார் அல்லது நம்முடைய சகோதரன் அல்லது நம்முடைய சகோதரியை விட ஏதோ சில ஆசிர்வாதங்கள் நமக்கு அதிகமாய் உள்ளது என்று நாம் காணும் போது, நாம் அதுகுறித்து நன்றியுள்ளவர்களாய் இருப்போமாக; அதேசமயம், பெருமையடித்துக்கொள்ள நம்மிடம் ஏதோவொன்று உள்ளது என்று ஒரு கணம் கூட நினைக்காமல் இருக்கக்கடவோம். இது ஓர் ஈவு (gift). நாம் இந்த ஈவின் மதிப்பினை உணர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும். மாறாக அதைப் பெற்றிருப் பதினிமித்தம் இறுமாப்பு அடையக்கூடாது. நாம் ஈவைப் பெற்றுக்கொண்டோம் என்பது நாம் அதில் குறைவுப் பட்டிருந்தோம் என்றும், அது நமக்குத் தேவையாய் இருந்தது என்பதையுமே காட்டுகின்றது. ...”*

***R5810:*** *“... ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சரீரத்தில் காணப்படும் உடன் அங்கத்தினருடைய நற்குணங்களையும் தாலந்துகளையும் காண முடிகின்ற மனத்தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டு மென்றும், ஒரு விதத்தில், மற்றவர்களிடமுள்ள அந்த நற்குணங்கள், தங்களுடையதைக் காட்டிலும் மேன்மையானவை என்பதாக எண்ண வேண்டுமென்றும் பரி. பவுல் அறிவுறுத்துகின்றார். ...”*

*“ . . . ஒவ்வொருவனும், மனத்தாழ்மையுடன், உடன் சகோதர சகோதரிகளிடம், சில குறிப்பிட்ட நற்பண்புகள் (அ) நற்குணங்கள் தன்னுடையதைக் காட்டிலும் உயர்வாயிருப்பதை மகிழ்ச்சியோடே அடையாளங்கண்டுகொண்டு, அதற்கேற்ப அவற்றைப் பெற்றிருக்கும் நபரையும் உயர்வாக மதித்திட வேண்டும். ...”*

## <u>சம்பந்தப்பட்ட பிலிப்பியர் 2:3ம் வசனத்திற்கான விளக்கவுரை</u>

***பிலிப்பியர் 2:3 – "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."***

**வாதினாலாவது** – *"கட்சிமனப்பான்மையிலிருந்து." (டயக்லாட்டு மொழியாக்கம்) R5842:3, R309:4*, R69:5* நீதிக்கான நேர்மை அனுமதிக்கும் அளவிற்கு நமது நடத்தை சமாதானமானதாக இருக்க வேண்டும், ஆனால் தேவையான சமயத்தில் உறுதி யில்லாமலோ, போரிடும் தன்மை இல்லாமலோ காணப் படக்கூடாது. HG471:3*

**வீண்பெருமையினாலாவது** – *"சுயத்திற்கு கடைசி இடம்" என்பதே இந்த அறிவுரையின் சாராம்சமாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் இப்பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. இக்கொள்கை திருச்சபைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. R5958:6 தற்புகழ்ச்சியும், ஒப்புயர்வற்ற மேன்மை அடைவதற்கான பிரயாசங்களும் – கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான மிகப் பெரிய எதிரிகளாக இருக்கின்றன. R5810:5, R2228:1*

**ஒன்றையும் ... செய்யாமல்** – *"சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." (எபே. 4:3) F282 "எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள்." (1 கொரி. 10:31) R5956:3 தெய்வீக வார்த்தையைத் தியானிப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும் நாம் ஒன்றுகூடிவரும்போது. OV426:T "எதையும் செய்யாமல்." (டயக்லாட்டு மொழியாக்கம்) R309:4* சபையிலோ வீட்டிலோ. R3940:1*

**மனத்தாழ்மையினாலே** – *"தாழ்மை/பணிவு." (டயக்லாட்டு*

*மொழியாக்கம்)* R5842:6, R309:4* *தாழ்மையில்லாத எவரையும் தேவனால் உயர்த்த முடியாது. அடிபணிந்திருப்பது விசுவாசத்தைக் குறிக்கிறது. அவருடைய பரந்த மேற்பார்வையான வழிகாட்டுதலை நாம் அநுதினமும் எதிர்நோக்கியிருக்கிறோம்.* R5844:2 ***லூசிபர் மற்றும் தாயாகிய ஏவாள் ஆகியோரின் பெருமையின் விளைவாக ஏற்பட்ட தீமைகளையும், மறுபுறம் லோகோசின் அழகிய முன்மாதிரியையும் கருத்தில் கொள்ளுகையில், மனத்தாழ்மை அடிப்படையானது எனக் காண்கிறோம்.*** R5843:3 ***நாம் நம்மைக் குறித்து நிதானமாக / தெளிவாக சிந்திக்க வேண்டும். நமது ஆற்றல்கள் அனைத்தும் தேவனிடமிருந்து வருபவையாகும்.*** *தேவன் நமக்கு ஓர் ஈவை/வரத்தை அளித்திருக்கிறார் என்றால், அது ஒருகாலத்தில் நம்மிடம் இல்லாமல் இருந்ததையே அது குறிக்கிறது.* R5843:4 *மிகவும் பணிவடக்கமுள்ளவர் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார். நாம் உண்மையான முன்னேற்றம் அடைய வேண்டுமானால், மனப்பூர்வமாக ‘‘உம்முடைய சித்தமே ஆகக்கடவது’’ என்று சொல்பவர்களாக காணப்பட வேண்டும்.* R5843:6 ***இது ஒரு மனம்சார்ந்த பண்பாகும், மேலும் இதனைப் பெற்றிருப்பவர் தேவனை மாத்திரம் மதிப்புடன் பார்க்காமல், பூமிக்குரிய ஜீவிகளிடத்திலும், அவர்களிடமுள்ள நற்பண்புகளையும் மதிப்புடன் பார்ப்பதற்கு இந்தப் பண்பு அவருக்கு உதவிடும்.*** R5842:3 *கர்த்தருடைய ஜனங்களில் சிலர் சத்தியத்தைப் பற்றியோ அல்லது சத்தியத்திற்கு ஊழியஞ்செய்யும் திறனைப் பற்றியோ பெருமைப்படலாம். இத்தகைய பெருமை மிகவும் சின்ன புத்தியையே குறிக்கின்றது.* R5842:3 *இது நம்மிடம் என்ன தாலந்துகள் இருக்கின்றன என்பது குறித்து அறியாமை யிலிருப்பதைக் குறிக்கவில்லை, மாறாக எந்தவொரு அபூரண மனிதனிடத்திலும் எல்லா பரிசுத்த ஆவியின் குணலட்சண ங்களும் நன்கு அபிவிருத்தி அடைந்த நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதே காரியமாகும்.* R5810:5, R2228:1 *என்னதான் மனத்தாழ்மையுடன் பிறந்திருந் தாலும்கூட, அதாவது அது ஒரு சுபாவமாகவே ஒருவருக்குள் இருந்தாலும்கூட, அவர் இறுமாப்பையும் பெருமையும் உள்ளே வரவிடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.* R4928:2 *கிறிஸ்தவ மனத்தாழ்மையானது மிக முக்கியமான குணலட்சணங்களில்*

*ஒன்றாக இருக்கின்றது, இதனை நாம் தொடர்ந்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.* R2227:6, R4928:2

**தங்களிலும் மேன்மையானவர்களாக** – *மிக முக்கியமானவராக.* R5901:1 *"உங்களிலும் சிறப்பாகச் செயலாற்றுபவராக." (டயக்லாட்டு மொழியாக்கம்)* R5842:6, R309:4* *நாம்* ***நம்முடைய சொந்த குறைபாடுகளையும், மற்றவர்களிடமுள்ள நல்ல குணங்களையும் கண்ணோக்குவோமேயானால், நாம் மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ணுகிறவர்களாக இருப்போம்.*** R4928:3 *பரிசுத்தத்தன்மையில் பெரியவர்களாக.* R2407:4; OV426:T *"கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்." (உரோ.* 12:10*)* R2011:4

**ஒருவரையொருவர் ... எண்ணக்கடவீர்கள்** – *மற்றவர்களிடமுள்ள நற்குணங்களைப் பகுத்தறிந்துகொள்வது; மற்றவர்கள் தங்களை விட எங்கே உயர்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்து வைத்துக் கொள்வது.* R5846:3, R5810:5, R2228:2 *கர்த்தருடைய நோக்கத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு, சுய சித்தத்தை அல்லது பெருமையைப் புறக்கணித்துவிட்டு (ஒருவரையொருவர் மேன்மை யானவர்களாக எண்ணக்கடவீர்கள்).* R5846:3 ***"என்னிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அவர்களிடம் குறைவாக இருந்தாலும், என்னிடம் இருப்பதை நான் பயன்படுத்துவதைக் காட்டிலும், அவர்கள் தங்களிடம் இருக்கும் அனைத்தையும் வெற்றியடைய வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தோடு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம்."*** *என்று நாம் உயர்வாக சிந்திக்கலாம்.* R5843:1 ***தேவன் நம்மை உயர்வாகக் கருதுவதைக்காட்டிலும் அந்தச் சகோதரனை இன்னும் உயர்வாக கருதலாம். தேவன் அந்நபரை ஒரு குமாரனாகக் கையாளுவதால், நாமும் அவரை அவ்வண்ணமாகவே மதித்து நடத்த வேண்டும்.*** R5843:2 ***நம்முடைய சொந்த நற்குணங்களை விடவும் மற்றவர்களுடைய நற்குணங்களைக் கருத்தில் கொள்வது.*** R4928:3 ***நாம் பொறாமைப்படக்கூடாது. நம் சகோதரனை/சகோதரியைக் குறித்து நன்மையாகப் பேச முடியாவிட்டாலும்கூட, தீமை பேசாதிருப்போமாக, ஏனெனில் தேவன் சகலத்தையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவார்.*** R31:6*

# உனக்கென்ன?

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*இடது புறமோ வலது புறமோ பாராதே,*
*சுற்றிலும் பாராதே. உன்னை நன்கு அறிந்தவரையே நோக்கிப் பார்.*
*என் மீதே உன் கண்களைப் பதிய வை.*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*உன் சகோதரனுடனோ, அவனது உபத்திரவங்களுடனோ*
*சோதனைகளுடனோ*
*அவனது துன்பங்களுடனோ உன்னை ஒப்பிடாதே.*
*என்னுடனே உன்னை ஒப்பிட்டுப் பார்.*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*நீ சிநேகிதனாக நினைப்பவன் – உனக்குத் தெரிந்ததைவிடவும்*
*அதிக செழிப்பாய் இருந்தால் – உனக்கென்ன?*
*நீயோ என்னை முழுமையாக நம்பு.*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*உனது சகோதரியிடமிருந்து வேறுபட்ட அனுபவங்களும்,*
*பாடங்களும்*
*உனக்கு என்ன தேவை என்பதை நான் அறிவேன்,*
*அதனால் நீ என்னுடனே நடக்கக் கற்றுக் கொள்வாயாக.*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*மற்றவர்களிடம் அதிகமாக இருந்தால் உனக்கென்ன?*
*நானே திராட்சச்செடி, நீயும் அவர்களும், என்னில்*
*நிலைத்திருக்கும் கொடிகள்,*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*நீ தவறாக சித்தரிக்கப்படுவாய்,*
*தவறாக புரிந்து கொள்ளப்படுவாய், நீயோ சோர்ந்துபோகாதே.*
*என் மீதே முழுவதுமாய்ச் சாய்ந்துகொள்.*

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*முற்றும் நான் உன்னை நன்கறிவேன்,*
*நீ ஜெயங்கொண்டு வெற்றி பெற என்ன தேவை என்பதையும்*
*நான் அறிவேன்.*

என்னிலேயே விசுவாசமுள்ளவனாய் இரு.

*நீ என்னைப் பின்பற்றி வா.*
*என் நுகத்தை உன் மீது ஏற்றுக்கொண்டு, நான்*
*வழிநடத்திக்கொண்டு போகும்*
*அமர்ந்த தண்ணீர்கள் மற்றும் புல்லுள்ள இடத்திற்குச் சென்று,*
*இவ்விதமாய் நீ என்னையே சார்ந்திரு.*

*உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா.*
*பெற்றோர், பிள்ளைகள், வாழ்க்கை துணை, சிநேகிகர் என*
*பூமியின் யாதொரு மனிதனைப்பார்க்கிலும் – நான் உன்னை*
*அதிகமாய் அன்புகூருகிறேன்,*
*வா, எந்தனுக்காய் நீயும் ஜீவ பலியாவாயாக.*

*– T.A. Blackwell*

*('St. Peter – Servant and Apostle of Jesus Christ' எனும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட கவிதை, ப. 115)*

## *1 கொரிந்தியர் 12:4-6*

*4) வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவி ஒன்றே.*
*5) ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.*
*6) கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.*

## *எபிரெயர் 12:1*

*"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;"*



BIBLE STUDENTS

Food for New Creature